நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 288 of 2020

## P.W. 4–ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகன் |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்லப்பன் |
| கிராமம் | : | குமாரபாளையம் |
| வட்டம் | : | குமாரபாளையம் |
| மாவட்டம் | : | நாமக்கல் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**5ம் எதிரி இறந்துவிட்டார். மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை கு.வி.மு.ச. 317 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.40 p.m.,)

1. நான் தற்போது குமாரபாளையத்தில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். அ.சா.1 இளவரசி என்னுடைய மகள் ஆவார். 1ம் எதிரி கார்த்திக் என்னுடைய மருமகன் ஆவார். எனது மகள் அ.சா.1 இளவரசியும் 1ம் எதிரி

கார்த்திக்கும் காதலித்து வந்துள்ளனர். அப்போது எனது மகள் திருமணத்திற்கு முன்பாகவே கர்ப்பமாகிவிட்டார். 2019 ம் வருடம் எனது மனைவி சுமதி மருத்துவமனைக்கு எனது மகளை கூட்டிச் சென்று எனது மகள் கர்ப்பமாக இருப்பதாக சொன்னார். என் மகளிடம் விசாரிக்கும்போது 1ம் எதிரி கார்த்திக் தான் இதற்கு காரணம் என்று சொன்னார்.

2. 1ம் எதிரி கார்த்திக் எனது அத்தை கோவிந்தாள் என்பவரின் பேரன் ஆவார். அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். தற்போது எனது மகளுக்கு 28 வயது ஆகிறது. கர்ப்பமாகி கவிநந்தன் என்ற மகன் உள்ளார். அவனுக்கு 6 வயது ஆகிறது. 1ம் எதிரியின் அப்பா மற்றும் அம்மாவிற்கு எனது மகள் கர்ப்பமாக இருப்பததை போன் செய்து தகவல் சொன்னேன். அவர்கள் திருமணம் செய்து வைத்துவிடலாம் என்று சொன்னார்கள். நானும் சரி என்று வரச்சொன்னேன்.

3. 2, 3 நாட்கள் வரததால் திருச்செங்கோடு மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அங்கு நடைப்பெற்ற விசாரணையில் 1ம் எதிரி தான் தான் கர்ப்பத்திற்கு காரணம் என்று ஒப்புக்கொண்டு அன்று இரவு 09.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் முடிந்து எனது மகளை அவர்களே காரில் அழைத்துச் சென்றுவிட்டார்கள். ஒரு வாரம் தான் அங்கு வைத்திருந்தார்கள். அதன் பின்னர் 1ம் எதிரி கார்த்திக் எங்கோ ஓடிவிட்டார்.

4. 1ம் எதிரி கார்த்திக் சென்ற பிறகு எனது மகளை சரிவர கவனிக்காமல் உணவு தராமல் அடிக்கடி விட்டு விட்டு சென்றுவிடுவதாக என் மகள் எனக்கு போன் செய்து சொன்னார். நான் போய் பார்க்கும்போது சோறு இல்லாமல் ஒன்று இல்லாமல் அழுதுக்கொண்டு உட்கார்ந்துகொண்டு இருந்தது. இதுப்பற்றி அவரது பெற்றோரிடம் கேட்டபோது அவரது அம்மா ராணி எனது மகனுக்கு வேறு திருமணம் செய்து வைத்துக்கொள்கிறேன் உங்களது மகளை கூட்டிச் செல்லுங்கள் என்று சொன்னார்.

5. 1ம் எதிரி கார்த்திக் வீடு கொளத்தூர் மூலப்பாறை பகுதியில் உள்ளது. நான்

உடனே கொளத்தூர் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொன்னேன். அவர்கள் மகளிர் காவல் நிலையம் போக சொன்னார்கள். மகளிர் காவல் நிலையம் வந்து எனது மகள் புகார் கொடுத்தார். போனில் போலீசார் கார்த்திக் அப்பா சரவணண் போன் செய்து கேட்டபோது எனது மகன் ஓடி போய் வேறு கல்யாணம் செய்து கொண்டார் நாங்கள் அங்கு வந்து என்ன செய்வது என்று சொன்னார். விசாரணைக்கு வர மறுத்துவிட்டனர்.

6. போலீசார் அங்கு சென்று அவர்களை அழைத்து வந்தனர். விசாரணைக்கு பிறகு அவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர். அதன் பிறகு சரவணன் போன் செய்து அவரது மகன் எனது அண்ணன் சுப்பிரமணி மகள் மைதிலி என்பவரை திருமணம் செய்து கொண்டதாக தகவல் சொன்னார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1ம் எதிரி கார்த்திக் வீட்டிக்கு அருகில் குடியிருப்பவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியும். ராமசாமி, மாதேஷ், பழனிசாமி ஆகியோர் குடியிருக்கின்றனர். எந்த தேதியில் கார்திக் வீட்டிற்க்கு வந்தோம் எந்த தேதியில் புகார் கொடுத்தோம் என்று எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. கொளத்தூர் காவல் நிலையத்தில் நான் எதும் புகார் கொடுக்கவில்லை. நான் எனது மகள் உடன் சென்று இருந்தேன்.
2. கொளத்தூர் காவல் நிலையத்தில் என் மகளிடம் என்ன விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் வெளியில் நின்று கொண்டிருந்தேன். திருச்செங்கோடு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் திருமணம் செய்துக்கொள்ள மறுப்பதாக 2019 ம் வருடம் பிப்ரவரி மாதம் என் மகள் புகார் கொடுத்தார். மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்ன தேதியில் புகார் கொடுத்தோம் என்று எனக்கு நியாபகம் இல்லை. எனது மகளை விட்டு விட்டு ஓடிவிட்டதாகவும் சாப்பாட்டுக்கு இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் புகார் கொடுத்தோம்.
3. நாங்கள் குமாராபாளையத்தில் இருப்பதால் இங்கு என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் வந்துக்கொண்டு தான் இருந்தேன். எனது மகளை அடித்து துன்புறுத்தியதாக மருத்துவச் சான்றிதழ் எதுவும் நான் விசாரணையில் ஒப்படைக்கவில்லை. சோறு போடாமல் கொடுமை செய்ததற்கு

நான் எவ்வாறு சான்றிதழ் கொடுக்க முடியும். எனது மகள் சொல்லி தான் சோறு போடாமல் கொடுமை செய்தது எனக்கு தெரியும். எனது மகள் ஆரம்பத்திலிருந்தே தனி குடித்தனம் போக வேண்டும் என சொல்லி பிரச்சனை செய்து இந்த பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைப்பெறவில்லை என்றாலும் என் மகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.05 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோகுலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC 288 of 2020

## P.W. 5–ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கதிர்வேல் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னதம்பி |
| கிராமம் | : | தங்கமாபுரிபட்டணம் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.07 p.m.,)

1. நான் தற்போது தங்கமாபுரிபட்டிணத்தில் குடியிருந்து பில்டிங் வேலை செய்து வருகிறேன். சுமார் 6 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.4 முருகன் எனக்கு போன் செய்து எனது மகள் கர்ப்பமாக இருப்பதாகவும் மூலப்பாறையில் திருமணம் செய்து கொடுத்ததாகவும் அவரை கொடுமை செய்வதாகவும்

அதனால் தனது மகள் இறந்துவிடுவேன் என்று சொல்வதாகவும் சித்தரவதை செய்தவதகாவும் சொல்வதாகவும் சாப்பிட கூட வழி இல்லை என்றும் காவல் நிலையம் செல்ல வேண்டும் என்று சொல்லி என்னை அழைத்தார்.

2. அ.சா.4 முருகன் 25 வருடங்களாக எனக்கு நண்பர். மேட்டுரில் தான் குடியிருந்தார். மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு நாங்கள் சென்றோம். அங்கு விசாரித்துவிட்டு கொளத்தூர் மூலப்பாறைக்கு போலீசார் எங்களை அழைத்துச் சென்றனர். போலீசார் பக்கத்து வீடுகளில் விசாரித்தனர். அவர்கள் சாப்பாடு போடாமல் கொடுமை செய்வதாகவும் பெண்ணை அழைத்து சென்றுவிடுங்கள் என்று எங்களிடம் சொன்னார்கள்.

3. அதன் பிறகு பெண்ணை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விட்டார்கள். அங்கு காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அழைத்தால் வரவேண்டும் என்று கையெழுத்து வாங்கினார்கள். அந்த தாளில் எதோ எழுதி இருந்தது எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்ன தேதியில் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 6 ½ வருடம் ஆகிவிட்டது. அ.சா.4 முருகன் அழைத்து தான் நான் காவல் நிலையத்திற்கு வந்தேன். மூலப்பாறைக்கு காரில் தான் சென்றோம். என்ன எழுதினார்கள் என்ற விவரம் தெரியாது. என்னுடன் ஜோசியகாரர் ஒரு நபர் கையெழுத்து போட்டார். நான் கையொப்பம் போட்ட பேப்பர் எழுதப்பட்டு இருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்று எனக்கு தெரியாது. அ.சா.4 முருகன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறன் என்றாலும் எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.20 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/--நா.கோகுலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC 288 of 2020

## P.W. 6–ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தங்கச்செல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | நாச்சி |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 6** |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 27–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.07 p.m.,)

1. நான் தற்போது கொளத்தூரில் அண்ணா நகரில் குடியிருந்து ஜோதிடராக தொழில செய்து வருகிறேன். இந்த வழக்கில் அ.சா.1 இளவரசி மற்றும் 1ம் எதிரி கார்த்திக் எனது உறவினர்கள். திருமணத்திற்கு முன்பாகவே அ.சா.1 இளவரசி கர்ப்பமாக இருப்பதாக கேள்விபட்டேன். விசாரிக்கும்போது 1ம் எதிரி கார்த்திக்

உடன் தான் பழக்கம் என்று சொன்னார்கள். முதலில் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதன் பிறகு திருச்செங்கோடு மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அங்கு திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார். அங்கேயே திருமணம் செய்துக்கொண்டும் மாலை மாற்றிக்கொண்டு போட்டோ எடுத்துக்கொணடார்கள். நானும் அப்போது அங்கு இருந்தேன்.

2. திருமணத்திற்கு பிறகு கொளத்தூர் கீழ்முலபாறையூரில் உள்ள 1ம் எதிரி கார்த்திக் வீட்டிற்கு அ.சா.1 இளவரசியை அழைத்து வந்து சுமார் 2 மாதம் அங்கு வாழ்ந்தார்கள். எங்களது வீட்டிற்கு அவர்களது வீட்டிற்கு 3 கி.மீ தான் தூரம் இருக்கும். திருமணம் செய்த 2 வது நாளிலிருந்தே பிரச்சனை தான். அந்த பெண்ணை துரத்திவிடும் நோக்கத்திலேயே தான் 1ம் எதிரி இருந்தார். அதன் பிறகு அ.சா.1 இளவரசி எனக்கு போன் செய்து அவரது மாமியார் ராணி தகாத வார்த்தைகளால் திட்டுவதாகவும் சாப்பாடு கொடுக்காமல் வெளியே தள்ளிவிட்டு பூட்டி விட்டு செல்வதாகவும் எனக்கு தகவல் சொன்னார். தகவல் அறிந்து நான் சென்று அ.சா.1 இளவரசியை பார்த்துவிட்டு சாப்பாடு வாங்கி கொடுத்துவிட்டு வந்தேன்.

3. நான் அங்கு செல்லும் போது அ.சா.1 இளவரசி சாப்பாடு இல்லாமல் வெளியே உட்கார்ந்துக்கொண்டு இருந்தார். வீடு பூட்டப்பட்டு இருந்தது. அதன் பிறகு அங்கு 1 கி.மீ தூரத்தில் இருக்கும் அ.சா.1ன் இளவரசியின் சித்தி செந்தாமரை என்பவர் வீட்டிற்கு சென்று நடந்த விவரங்களை சொல்லி அவரை போய் அங்கு பார்க்கச் சொன்னேன். அவரது மாமியார் வரும் வரை மேற்படி செந்தாமரை அவரை பார்த்துக்கொள்வார்.

4. அதன் பின்னரும் இது தொடர்ந்ததால் கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்று நானும் செந்தாமரை, இளவரசி, இளவரசியின் அப்பா மற்றும் அம்மா அங்கு சென்று இளவரசி அங்கு புகார் கொடுத்தார். விசாரித்து விட்டு அ.சா.1 இளவரசியை அவரது பெற்றோர் உடன் அனுப்பி விட்டார்கள். திருமணம் ஆன 2 ம் நாளே 1ம் எதிரி கார்த்திக் எங்கேயே ஓடி விட்டார். 2019 ம் வருடம் நவம்பர் மாதம் மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நானும், இளவரசி மற்றும் அவரது குடும்பத்தார் சென்று அ.சா.1 இளவரசி புகார்

கொடுத்தார். வீட்டைக் காட்டச் சொன்னதால் நானும் அ.சா.5 கதிர்வேலும் போலீசார் அழைத்துச்சென்று அவர்களின் வீட்டை காட்டினோம்.

5. அங்கு வீட்டை பார்த்து விட்டு சுற்றுப்புறத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்தார்கள். அருகில் இருந்தவர்களை விசாரித்தார்கள். சம்பவம் இடத்தில் வைத்து மேற்கண்டவாறு வரைப்படம் வரைந்தற்கு நானும் கதிர்வேலும் சாட்சி கையெழுத்து செய்தோம். நாங்கள் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மேற்படி தயார் செய்து நான் கையொப்பம் செய்தது தான். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. குறிப்பாக போலீசார் என்ன தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2019 ம் வருடம் நவம்பர் மாதம் விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்துவிட்டு அ.சா.1 இளவரசி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இருவரும் எனது உறவினர்கள் தான். கொளத்தூர் காவல் நிலையத்தில் அ.சா.1 இளவரசிக்கு சாப்பாடு கொடுப்பதில்லை மற்றும் தண்ணீர் கொடுக்கவில்லை வீட்டை பூட்டி வைத்துவிடுகிறார்கள் 1ம் எதிரி கார்த்திக் ஓடிவிட்டார் என்று தான் புகார் கொடுத்தார்.
2. நான் சொன்னவாறு புகார் எதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொளத்தூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். அது சம்மந்தமப்பட்ட குற்ற எண் எனக்கு தெரியாது. கொளத்தூர் காவல் நிலையத்தில் அ.சா.1 இளவரசியின் கணவர் காணாமல் போய்விட்டதாகவும் கொடுமைப்படுத்துவதாகவும் குழந்தை பிறந்துவிட்டதாலும் 1ம் எதிரி கார்த்திகை கண்டுபிடித்து தருமாறு புகார் கொடுத்தோம். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எதும் நடைப்பெறவில்லை என்றால் சரியல்ல.
3. அ.சா.1 இளவரசி உறவினர்கள் அழைத்ததால் தான் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—01.40 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோகுலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**